செய்தி வெளியீடு எண்: 1015 நாள் : 19.11.2010.

**<u>தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர்கள் சங்கத்தின் கோரிக்கைகளை ஏற்று</u>**

**<u>வருவாய்த் துறையிலுள்ள இளநிலை உதவியாளர் – உதவியாளர் பதவிப் பெயர்கள்</u>**

**<u>“இளநிலை வருவாய் உதவியாளர் – வருவாய் உதவியாளர்’’ எனப் பெயர் மாற்றம்!</u>**

**<u>மற்றும்</u>**

**<u>வருவாய்த் துறை அலுவலர்களுக்கு வாகன எரிபொருள் அளவு அதிகரிப்பு!</u>**

**<u>முதலமைச்சர் கலைஞர் ஆணை!</u>**

வருவாய்த் துறையில் பணியாற்றும் “இளநிலை உதவியாளர்’’ மற்றும் “உதவியாளர்’’ பதவிப் பெயர்களை மாற்றி அறிவிக்குமாறு தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர்கள் சங்கம் அரசுக்கு அளித்த கோரிக்கையை மிகுந்த பரிவோடு பரிசீலனை செய்து;

வருவாய்த் துறை மிகவும் பழைமை வாய்ந்த துறையாக இருப்பதாலும், முதியோர் உதவித் தொகை வழங்குதல், 2006ஆம் ஆண்டின் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூக மற்றும் பாதுகாப்பு நலம்) திட்டம், இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்குதல் மற்றும் இலவச எரிவாயு மற்றும் எரிவாயு அடுப்பு வழங்குதல் போன்ற பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் துறையாக இருப்பதாலும், வருவாய்த் துறையில் பணிபுரியும் “இளநிலை உதவியாளர்’’ பதவியின் பெயரை “இளநிலை வருவாய் உதவியாளர்’’ என்றும்; “உதவியாளர்’’ பதவியின் பெயரை “வருவாய் உதவியாளர்’’ என்றும் பெயர் மாற்றம் செய்திட முதலமைச்சர் கலைஞர் இன்று (19.11.2010) ஆணையிட்டுள்ளார்.

தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் மற்றொரு கோரிக்கையை ஏற்று, வருவாய்த் துறையில் பணியாற்றும் வருவாய்க் கோட்டாட்சியரின் வாகனத்திற்குத் தற்போது மாதந்தோறும் வழங்கப்படும் 115 லிட்டர் டீசல் அளவை 165 லிட்டர் என்றும்; வட்டாட்சியரின் வாகனத்திற்கு தற்போது மாதந்தோறும் வழங்கப்படும் 90 லிட்டர் டீசல் அளவை 140 லிட்டர் என்றும் உயர்த்தி வழங்கிடவும் முதலமைச்சர் கலைஞர் இன்று (19.11.2010) ஆணையிட்டுள்ளார். இதன் காரணமாக அரசுக்கு ஆண்டொன்றுக்கு 1 கோடியே 25 இலட்சத்து 70 ஆயிரத்து 600 ரூபாய் கூடுதல் செலவாகும்.

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9